3rd April 1965]

Surgical instruments factory at Madras

* 421 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state the details of the proposal for the establisment of a surgical instruments factory at Madras and the progress made so far?

THE HON. SRI R. VENKATARAMAN : A statement [a] is placed on the Table of the House.

திரு. வை. சங்கரன் : அதிலே வெளியார்களிடமிருந்து நாம் உதவி பெறுவது எந்த அளவுக்கு இருக்கிறது? அது நம்முடைய எத்தனை சதவிகிதத் தேவையை பூர்த்தி செய்கிறது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : வெளியிலிருந்து எவ்வளவு கிடைக்கும் என்பதுபற்றி யெல்லாம் மத்திய சர்க்கார்தான் புள்ளி விவரம் வைத்திருக்கிறார்கள். நம்மிடத்திலே கிடையாது. நம்முடைய தேவைக்குப் பெரிய அளவு, இது உதவியாக இருக்கும் என்றுதான் இது அமைக்கப்பட்டிருக்கிறது.

இம்மாநிலத்தின் சிறு அளவுத் தொழில்களுக்கு மூலப் பொருள்கள்

* 422 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது மாநிலத்திலுள்ள சிறு அளவுத் தொழில்களுக்கு (Small Scale Industries) வேண்டிய மூலப் பொருள்கள் மத்திய சர்க்காரால் ஒதுக்கிடு செய்யப்படவில்லை என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) While supplies of raw materials are being received from the Centre regularly, the entire needs of the State are not fully met. This is due to diversion of the materials for defence purposes and rise in prices for the metals in the international market.

திரு. து. ப. அழகமுத்து : தொழில் பேட்டையில் தொழில் ஆரம்பித்தவர்கள், ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்டிரியலிஸ்டுகள் நம்முடைய மாநிலத்திற்கு மட்டும்தான் இப்படி அநீதி இழைக்கப் படுகிறது என்று புகார் சொல்லுகிறார்கள். அமைச்சர் அதற்கு என்ன வழிவகை செய்யலாம் என்று கருதுகிறார்?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அது சரியல்ல. நம்முடைய ராஜ்யத்தினுடைய தேவை மற்ற எல்லா ராஜ்யங்களின் தேவையைவிட அதிகமாக இருக்கிறது. காரணம், நம்முடைய ராஜ்யத்தில் அதிகமாகத் தொழில்கள் வருகின்றன. அதனால்தான் தேவையும் அதிகமாக இருக்கிறது.

---

[a] Printed as Appendix I on pages 158-160 infra.

[3rd April 1965

திரு. இரா. நெடுஞ்செழியன் : நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையில் மூலப்பொருள்களைப் பொறுத்து பற்றாக் குறை இருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அந்தப் பற்றாக்குறையை நீக்குவதற்கும், தொழிற்சாலையை இயங்க வைப்பதற்கும் அரசாங்கம் எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இதற்காக மத்திய போர்டு ஒன்று இருக்கிறது. மத்திய போர்டுக்கு அவ்வப்பொழுது நமக்குத் தேவைப்படுவது என்னவென்றும், நமக்குக் கிடைப்பது என்னவென்றும் கணக்குகள் கொடுக்கிறோம். இன்னும் அதிக மாகச் சிறு தொழில்களுக்காக அகில இந்திய ரீதியிலே ஒதுக்க வேண்டும் என்றும் வாதாடுகிறோம். நமக்குக் கிடைக்காத பொருள்களெல்லாம் ராணுவத் தேவைக்கும் வேண்டிய பொருள் களாக இருக்கின்றன அல்லது உலகத்திலேயே கிடைக்காத பண்டங்கள் (ஸ்கேர்ஸ் மெடீரியல்ஸ்) ஆக இருக்கின்றன. அப்படிப் பட்ட பொருள்களில்தான் கிடைக்காத பொருள்கள் அதிகமாக இருக்கின்றன. 'பிக் ஐயேரன்' போன்றவைகளில் அவ்வளவு நமக்குப் பற்றாக்குறை இல்லை. ஓரளவுக்குப் பற்றாக்குறை இருக் கிறது, ஆனால் பெரிய அளவுக்கு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

9-00 a.m. திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை : தலைவர் அவர்களே, ஒவ் வொரு பஞ்சாயத்துக்கும், பஞ்சாயத்து மன்றத்திற்கும் ரூ. 50,000 என்று கொடுத்து, தச்சுப் பட்டரை, கொல்லுப் பட்டரை இவற் றை அமைக்கிறார்கள். ஆனால், ரா-மெடீரியல்ஸ் கிடைக்காத காரணத்தினால், கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. அதற்குச் சர்க்கார் என்ன ஏற்பாடு செய்திருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதற்குத்தான் ஒரு பெரிய முயற்சி எடுத்திருக்கிறோம். இதிலே, 'வயர்ஸ் அண்ட் ஷீட்ஸ்' தவிர, ஜி.பி. ஷீட்ஸ், ஜி.ஐ. ஷீட்ஸ் தவிர மற்ற இரும்பு வகைகள் எல்லாம் கிடைக்க ஏற்பாடுகள் செய்துவிட்டோம். கிடைக்காத பொருள்களான, வயர்ஸ் அண்ட் ஷீட்ஸ்களில்தான் இன்றைக்குப் பற்றாக்குறை அதிகமாக இருக்கிறது.

திரு. து. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, மாநிலத்தின் தேவைக்கு எத்தனை சத விகிதம் குறைவாக மூலப் பொருள்கள் கிடைக்கின்றன ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அது பண்டத்தைப் பொறுத்திருக்கிறது. உதாரணமாக, 'பிக் ஐயேரனை' எடுத்துக் கொண்டால் நம் ராஜ்யத்தின் தேவை 26,055 டன் என்று கணக் கிடப்பட்டிருக்கிறது. அதிலே, 12,553 டன் கிடைத்திருக்கிறது. ஆனால், அதே சமயத்தில் காப்பர், செம்பை எடுத்துக் கொண்டால் ராஜ்யத்தின் தேவை 6,000 டன், அதிலே 747 டன் தான் கிடைத்திருக்கிறது.

3rd April 1965]

திரு. வை. சங்கரன்: பொதுவாக நம்முடைய இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்டுகளில் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் தொழில்களில் குறிப்பாக ஃபௌண்ட்ரிகளுக்கு, கோக் பிக் ஐயேரன் போன்றவை போதிய அளவு கிடைக்காததால், ஃபௌண்டரிகள் பெரும் அளவுக்கு நிறுத்தி வைக்கப்பட்டுவிட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. இது சம்பந்தமாக வேண்டிய நடவடிக்கைகளை சர்க்கார் எடுத்துக் கொண்டு இருக்கிறார்களா? இல்லையென்றால் இனியாவது எடுப்பார்களா என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அந்த நிலை இருக்கிறது என்றுதான் முதலிலேயே சொன்னேன்.

அரசாங்கப் போக்குவரத்து இலாகாவின் பணியாட்களுக்கு ஊக்க போனஸ்

* 423 கேள்வி.—திரு. கே. ஏ. மதியழகன்: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அரசாங்கப் பஸ் போக்குவரத்து இலாகாவில் பழுது பார்க்கும் டிப்போக்களில் உள்ள மெக்கானிக்குகளுக்கு "ஊக்க போனஸ்" கொடுக்கப்படுகிறதா?

(இ) ஆம் எனில், அதன் விவரமென்ன?

THE HON. SRI R. VENKATARAMAN: (a) Yes.

(b) A paper[a] is placed on the Table of the House.

ஒவ்வொரு மாவட்டத்திற்கும் மண்வளப் பரிசோதனை நிலையம்

* 424. கேள்வி.—திரு. கே. ஏ. மதியழகன்: கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) உணவு உற்பத்தியைப் பெருக்க மாவட்டந்தோறும் "மண்வளப் பரிசோதனை நிலையம்" அமைக்க உத்தேசமுண்டா?

(இ) ஆம் எனில், அதன் விவரமென்ன?

கனம் திரு. பூ. கக்கன்: (அ) & (இ) அவசியமான யந்திர சாதனங்கள் கிடைத்தால் ஒவ்வொரு மாவட்டத்திலும் மண்வள ஆய்வுக்கூடம் ஒன்றை ஏற்படுத்த முடியும். இச் சாதனங்கள் இந்தியாவில் தயாரிக்கப்படுவதில்லை. எனவே, அவற்றை இறக்குமதி செய்ய வேண்டியிருக்கிறது.

(a) & (b) If necessary equipment becomes available it will be possible to set up one Soil Testing Laboratory in each district. The equipment has to be imported as it is not indigenously manufactured.

---

a Printed as Appendix II on pages 160–164 infra.